உ

அருள்மிகு

# மனத்துணைநாதர் திருக்கோயில்

(அருள்மிகு இருதய கமலநாத சுவாமி திருக்கோயில்)

வலிவலம்,

திருவாரூர் வட்டம், - தஞ்சாவூர் மாவட்டம்.

# தல வரலாறு

(தேவாரப் பதிகங்கள் மற்றும் வலிவல மும்மணிக் கோவையுடன்)


தொகுத்தவர் :

க. சபாபதி, பி.ஏ.,

செயல் அலுவலர்.



வெளியீடு :

அருள்மிகு இருதய கமலநாத சுவாமி திருக்கோயில்

வலிவலம்.

ஆண்டு - 1978

# கோயிலின் வரைபடம்


மேற்கு
7
8
9
10
11
6
1
12
2
13
3
4
5
15
14
16
019
17
18
20
நந்தவனம்
திருக்குளம்
திருக்குளம்
நந்தவனம்

# வரை படத்தின் எண் விளக்கங்கள்

| எண் | விளக்கம் |
|---|---|
| 1. | சுவாமி கருவறை |
| 2. | சோமாஸ்கந்தர் சன்னதி |
| 3. | நடராசர் சன்னதி |
| 4. | முன் மண்டபம் |
| 5. | விநாயகர் |
| 6. | தென்முகச் சிவனார் சன்னதி |
| 7. | வலம்புரி விநாயகர் சன்னதி |
| 8. | அடியார்கள் மண்டபம் |
| 9. | சுப்பிரமணியர் சன்னதி |
| 10. | திருமகள் சன்னதி |
| 11. | காசிப்பெருஞ்சிவனார் சன்னதி |
| 12. | சண்டிகேசுவரர் சன்னதி |
| 13. | அறை |
| 14. | ஒன்பான் கோள்கள் மண்டபம் |
| 15. | மடைப்பள்ளி |
| 16. | அம்மன் கோயில் |
| 17. | வசந்த மண்டபம் |
| 18. | பிடாரி கோயில் |
| 19. | தல புன்னை மரம் |
| 20. | வாகனங்கள் அறை |

# தல வரலாறு

*திருச்சிற்றம்பலம்.*

“பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.”

— *திருஞானசம்பந்தர்.*

முன்னுரை :

*“வேறு வேறு உருவும் வேறுவேறு இயற்கையும் நூறு நூறு ஆயிரம் இயல்பினதாகி ஏறுடையீசனை இப்புவனியை உய்யக்” கூறுடை மங்கையும் தானும் வந்து எழுந்தருளும் பெருமையுடையது இப்பூவுலகம். சொல்லும் பொருளும் அவனே என்பதால், உள்ளத்தின் உயிர்த்துடிப்பும் அவனே என்பதால் உருவெலாம் கலந்து பொருளாகி நிற்பவனும் அவனே என்பதால், “சொற்பதம் கடந்த தொல்லோனை உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படானை, கண்முதற் புலனாற்காட்சியும் இல்லோனை” சொல்கொண்டு அர்ச்சிக்கின்றோம்; நெஞ்சில் நினைந்து வாழ்த்துகின்றோம்; இது அவன் திருமேனி எனக்கொண்டு ஆராதனை செய்கின்றோம். தாயிற் சிறந்த தயாவான தத்துவன் தானே வந்திறங்கி ஏதங்கள் அறுத்து நம்மை ஆட்கொள்ள எழுந்தருளுகின்றான் இப்புவனியில்.*

காண்பதற்குக் கண் இருந்தால் காணுமொரு பொருள் வேண்டும். நினைந்துருக நெஞ்சிருந்தால் நினைவுக்கோர் உரு வேண்டும். பற்றற்ற கண் பரமானந்த நிலையில் பாவிப்பதற் கொரு பொருள் வேண்டாம்; பற்றி நிற்பதற்கொரு உரு வேண்டாம்; அந்தநிலை எய்துமுன் இந்தநிலை, இருவினை யொப்பு எய்தாமல் இடர்பட்டுழலும் இந்தநிலை கடந்தாக வேண்டும். நிலைகொள்ளாமல் தவித்திடும் இம்மானுடப் பிறப்பில் நிலையொன்று தந்து நெடும்பயணம் தொடர்ந்து செல்லத் துணையென வந்தமைந்ததே திருக்கோயில்கள்.

## தல அமைவிடம் :

பன்னருஞ் சிறப்பின் புண்ணியத் தலமாகிய **வலிவலம்** என்னும் இவ்வூர் பொன்னிவள நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் வட்டத்தில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் கச்சனம் – கீழ்வேளூர் சாலையில் அமைந்துள்ளது. தமிழ் வேந்தர்கள் ஆண்ட காலத்தில் இவ்வூர் 'அருண்மொழித்தேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்து வலிவலம்' என்று குறிக்கப்படுகின்றது. கொன்றைவனம், வில்வவனம், ஏகச்சக்ரபுரம், முன்னூற்று மங்கலம் என்னும் வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உள. காவிரித் தென்கரை 121வது சிவத் தலமாக இத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு அருகாமையில் தெற்கே கைச்சின்னம் (கச்சனம்) என்னும் தலமும், மேற்கே திருக்காறுயில் (திருக்காரவாசல்) திருநெல்லிக்காவல் ஆகிய தலங்களும், வடக்கே கன்றுாப்பூர் (கண்ணைப்பூர்), சாட்டியக் குடி ஆகிய தலங்களும், கிழக்கே திருக்கோளிலி (திருக் குவளை) என்னும் தலமும் அமைந்துள்ளன.

இவ்வூரில் மனத்துணைநாதர் திருக்கோயிலன்றி அருள் மிகு ஏகச்சக்ர நாராயணப் பெருமாள் கோயில் ஒன்றும்

உள்ளது. மற்றும் மாரியம்மன், காளியம்மன், ஐயனார் ஆகிய தெய்வங்களுக்கும் கோயில்கள் உள்ளன.

இவ்வூரின்கண் மேல்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, காவல் நிலையம், மருத்துவமனை ஆகியன உள்ளன.

## கோயிலும் மூர்த்திகளும் :

பொன்னியின் நன்னீர் புக்குமுகச் செய்து புதுமலர்க் காவும் பொலிவுடன் மருங்கமையக் கயல்மாண்ட தண்ணளித் தடாகம் மயல் கொண்டு சூழ நடுவமைந்தெழுந்த இத்திருக் கோயில் இன்னாளில் அருள்மிகு இருதய கமலநாத சுவாமி திருக்கோயில் என்று அழைக்கப்படுகின்றது. இப்பெயர் இடையில் வந்தமைந்ததேயாகும். இக்கோயில் பற்றிய தேவாரப் பதிகங்கள் 'மனத்துளானே' என்று போற்று கின்றன. வலிவலத்து மனத்துணைநாதர் பெயர் சோழர்கள் காலத்தில் மனத்துணைத் தேவரென்றும், மனத்துள் நாயனா ரென்றும் வழங்கி வந்ததென்பதைக் கல்வெட்டுக்களிலிருந்து அறிகின்றோம். அம்மையின் பெயர் மாழையொண்கண்ணி ஆகும்.

இத்திருக்கோயிலின் முதற் திருச்சுற்றில் நுழையும் பொழுது கணபதி காட்சியளிக்கின்றார். தென்மேற்கு மூலையில் வலம்புரி விநாயகரும், வடமேற்கில் சுப்பிரமணியரும், திருமகளும் எழுந்தருளுகின்றனர். தென்முகச் சிவனார், காசிப் பெருஞ்சிவனார், கொற்றவை, சண்டிகேசுவரர், ஒன்பான்கோள்கள் முதலான மூர்த்திகளை யும், இத்திருக்கோயிலில் கண்டு வழிபடலாம். தனி அடியார் அறுபத்துமூவருடன் தொகை அடியார் ஒன்பதின்மருக்கும் திருமேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஈசான்ய மூலையில் பிடாரி கோயில் உள்ளது.

இத்திருக்கோயில் நிலத்தில் அமைக்கப்படாமல் செய் குன்றின்மேல் அமைக்கப்பட்டுள்ளது. இதை மாடக்கோயில்

என்றும், பெருங்கோயில் என்றும் அழைப்பர். இவ்வமைப் புடைய கோயில்களைக் கட்டுவித்தவர் சோழ மன்னனான கோச்செங்கண்ணான் என்று கூறப்படுகின்றது. இது குறித்த விவரம் பின்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் உள்ளபடி இக்கோயிலின் நீளம் 115 மீட்டர்; அகலம் 50 மீட்டர்; பரப்பளவு 5,750 சதுர மீட்டர் ஆகும். இராசகோபுரமும் உண்டு.

இத்திருக்கோயிலில் வலிவும் வனப்பும் உடையதாய் முன்மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.

கோயிலைச்சுற்றி அமைந்துள்ள திருக்குளம் சங்கர தீர்த்தமென்று வழங்கப்படுகிறது. இக்கோயிலின் தலமரம் புன்னை மரம் ஆகும்.

## மாடக்கோயில்கள் எழுந்த கதை :

தென்தமிழன், வடபுலக்கோன், தென்னகத்துக் குடகொங்கன் என்றெல்லாம் போற்றப்பெறும் செம்பியன் கோச்செங்கணான் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். கோச்செங்கட்சோழர் மாடக் கோயில்களைக் கட்டுவித்ததற்கான வரலாற்றை அறிந்துகொள்ளுவது ஏற்புடைத்ததாகும்.

சோணாட்டில் காவிரியாற்றின் கரையில் சந்திர தீர்த்தத்தின் அருகமைந்த பூஞ்சோலையொன்றிலுள்ள வெண்ணாவல்மரத்தின்கீழ் (திருவானைக்கா) தேவதேவனாகிய சிவபெருமான் சிவலிங்கமாய்த் திருவருளுரு தாங்கியிருந்தார். முற்பிறப்பில் தவஞ்செய்த வெள்ளை யானை ஒன்று அவ்வுருவைக் கண்டு அன்பு மேலிட்டுக் கையால் நீரினை முகந்துவந்து ஆட்டியும் பூக்கள் சாத்தியும் நீலகண்டனை நித்தலும் வழிபட்டது. இதனால் இவ்விடத்திற்கு திருவானைக்கா என்ற பெயரும் உண்டாயிற்று. இஃது

இவ்வாருக ஞானமுடைய நற்சிலந்தியொன்று நம்பர் முடி மேல் சருகு முதலியன வீழ்ந்து தூய்மை கெடாமலிருப்பதற்காக மேல்விதானமென்னுமாறு வாயின் நூலால் வலையொன்று செய்தது. ஆண்டவரை வழிபட வந்த யானை அதைக்கண்டதும் அவ்வலை அங்கிருப்பது அனுசிதமென்று கருதி அழித்துவிட்டுச் சென்றது. பின்னர் சிலந்தி வந்து பார்த்துச் சினமுற்று மீண்டும் பந்தரமைத்தது. யானை வந்தகாலை மறுபடியும் அப்பந்தரைக் கண்டு ஆற்ருெணுச் சினங்கொண்டு அழித்தது. சிலந்தி வந்து பார்த்து பந்தரைக் காணுமல் சினமிகக்கொண்டு யானையின் துதிக்கையில் நுழைந்து கடித்தது. கடிக்கவே வலி பொறுக்கலாற்ருது யானை நிலத்திலே கையை மோதிக் கீழே விழுந்து இறந்தது. ஐயன் யானைக்கு நல்வரமளித்து, சிலந்தியானது சோழவரசன் சுபதேவனுக்கும் அவன் மனைவி கமலவதிக்கும் மகனுகப் பிறக்கச்செய்தார். பிறந்து முடிசூடி அரசாண்ட காலையில் பழம் பிறப்புணர்ச்சியால் இம்மாதிரி மாடக் கோயில்கள் அமைத்துச் சைவத் தொண்டு புரிந்தான். யானையால் ஐயனுக்கு இடர் நேர்ந்தமையால் யானை ஏற முடியாதவாறு மாடக்கோயில் அமைந்ததாகக் கூறுவர். சிலந்தியும், வெள்ளை யானையும் அடைந்த பேற்றைத் திருநாவுக்கரசரும், சுந்தரரும் தமது தேவாரப் பதிகங்களில் குறிப்பிடுகின்றனர்.

கி. பி. 4-ஆம் நூற்ருண்டிற்கு முன்பிருந்த சோழ மன்னன் கோச்செங்கணுன் எழுபதிற்கும் மேற்பட்ட மாடக் கோயில்களைக் கட்டுவித்தான் என்று அறியப்படுகிறது. இதனை,

"பெறுக்காறு சடைக்கணிந்த பெருமானைசேரும்
பெருங்கோயி லெழுபதினே டெட்டு மற்றும்"

என அப்பர் அடிகள் தேவாரத்திலும், 'எண்டோளீசற்கு எழில்மாடமெழுபது செய்துலகாண்ட திருக்குலத்து வளச்

சோழன்' என பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வாரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

**தனிச் சிறப்புகள் :**

வலியனை (கரிக்குருவி) வழிபட்டுப் பெரும்பேறு பெற்றதால் இத்தலத்திற்கு வலிவலம் என்று பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. சூரியன் இங்கு வந்து இறைவனை வழிபட்டுவிட்டு வலமாகச் சென்றுவந்தகாலை அவன் தேர்ச்சக்கரம் அழுந்திப் பள்ளம் ஏற்பட்டு திருக் கோயிலைச் சுற்றி அகழியானது என்று செவி வழிச் செய்தி யொன்று உண்டு. காரண மாமுனிவன் வழிபட்ட தலம் இது.

கள்ளமிலா அன்பைக் கட்டிக்கரும்பாய், பாகாய் கன்னித் தமிழில் வடித்தெடுத்து உள்ளம் கொண்ட தலைவனுக்கு ஒரு தனிச் செம்பொருளாம் தென்னாடுடைய சிவனுக்குப் பாமாலையாய்ச்சூடிய தேவாரம் தந்த மூவராலும் பாடப்பெற்ற சிறப்பினை உடையது இத்திருக்கோயில். திருஞானசம்பந்தர் 22 பாசுரங்களையும், திருநாவுக்கரசர் 10 பதிகங்களையும், சுந்தரர் 11 பதிகங்களையும் பாடி உள்ளார்கள். தேவாரப் பாடல்களை ஓதத்தொடங்கு முன் ஓதப்பெறும் திருஞானசம்பந்தர் அருளிய 'பிடியதனுருவுமை' எனத் தொடங்கும் பதிகம் இக்கோயில் இறைவன்மேல் பாடியதாகும். திருத்தொண்டர் புராணத்தில் தேவார ஆசிரியர்கள் வரலாறு கூறுமிடத்து இவ்வூரின் பெயர் குறிக்கப்படுகின்றது.

இவ்வூர் இறைவனைப் பற்றியும், இறைவியைப் பற்றியும் சிறப்பித்துக்கூறும் 'வலிவல மும்மணிக்கோவை' என்ற அறியநூல் ஒன்று பெரும்பேராசான் உ. வே. சாமிநாதையர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்நூல் விநாயகர் காப்புச் செய்யுளோடு 31 செய்யுட்களைக் கொண்டது.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள முருகனை அருணகிரி நாதர் திருப்புகழ் பதிகமொன்றில் பாடியுள்ளார்.

இக்கோயில் பற்றிய தேவாரப் பதிகங்கள் மற்றும் வலிவல மும்மணிக்கோவை ஆகியவற்றை இந்நூலின் இறுதியில் காண்க.

**கல் வெட்டுகள் :**

இக்கோயிலிலிருந்து படி எடுக்கப்பட்ட ஒன்பது கல்வெட்டுக்களை அரசு 1911-ஆம் ஆண்டு வெளியிட்ட கல்வெட்டுகள் பதிப்பு நூலில் வெளியீடு செய்துள்ளது. குலோத்துங்கச் சோழனால் வலிவலத்து மனத்துள் தேவருடைய தேவதான கிராமமாகிய குலோத்துங்கச்சோழ நல்லூரில் குளம் ஒன்று தோண்டுவதற்காக எடுத்துக் கொண்ட நிலத்திற்குப் பதிலாக வேறொரு நிலம் கோயிலுக்கு கொடுக்கப்பட்டது என்பதும், இராசராச தேவன் கோயிலுக்குத் தந்த ஒரு நிலத்தை தேவதானம் என்று குறிப்பிடுவதற்காகத் திரிசூலம் நிலத்தில் நடப்பட்டது என்பதும், நிலங்களுடைய விலையை எட்டு அலுவலர்கள் மதிப்பிட்டார்கள் என்பதும், நில விற்பனை பற்றிய பொது ஏலத்தின் பெயர் இராசராசப் பெருவிலை என்பதும் மேற்படி கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படும் சில செய்திகளாகும். திரிபுவனச் சக்ரவர்த்தி இராசேந்திரச் சோழன் காலத்தில் "திருவலிவலத்தில் தவப்பெருமான் திருமடம், திருமூலத் தேவர் தவமடம் ஆகிய இரண்டு மடாலயங்கள்" இருந்தன என்பதையும் மேற்படி கல் வெட்டுக்களிலிருந்து அறிகின்றோம்.

**கோயில் மேலாண்மை :**

இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்டதாகும். கோயிலின்

நிர்வாகம் அறங்காவலர்களாலும், செயல் அலுவலராலும் ஆட்சித்துறை மேலதிகாரிகளின் ஆணைக்கும், அதிகாரத் திற்கும் உட்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. இது 2-ஆம் நிலைக் கோயிலாகும்.

இத்திருக்கோயிலில் நாள்தோறும் ஆறுகாலப் பூசை களும், ஆண்டுதோறும் முதன்மைச் சிறப்புற்றத் திருவிழாவாகச் சித்திரைத் திருவிழாவும் நடத்தப்பெற்று வருகின்றன. கந்தர்ஷஷ்டித் திருவிழா கந்தர்ஷஷ்டி அறக்கட்டளையினரால் ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வருகின்றது.

இக்கோயிலுக்குச் சொந்தமாக 310·25 ஏக்கர் நஞ்செய் நிலமும், 23·15 ஏக்கர் புஞ்செய் நிலமும் உள்ளன.

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

---

## திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

நல்லான்காண் நான்மறைக ளாயினான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயி னான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 1

ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிரா னான்காண்
உள்ளவன்காண் இல்லவன்காண் உமையாட் கென்றுந்
தேனவன்காண் திருவவன்காண் திசையா னான்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலையா னான்காண்
களியானை ஈருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 2

ஏயவன்காண் எல்லார்க்கு மியல்பா னான்காண்
இன்பன்காண் துன்பங்க ளில்லா தான்காண்
தாயவன்காண் உலகுக்கோர் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யெங்கும்

ஆயவன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
அகங்குழைந்து மெய்வருந்தி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 3

உய்த்தவன்காண் உடல்தனக்கோர் உயிரா னான்காண்
ஓங்காரத் தொருவன்காண் உலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழையா னான்காண்
விளைவவன்காண் விரும்பாதார் நெஞ்சத் தென்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழுந் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்புஞ் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 4

கூற்றவன்காண் குணமவன்காண் குறியா னான்காண்
குன்றங்க ளனைத்துங்காண் கோல மாய
நீற்றவன்காண் நிழலவன்காண் நெருப்பா னான்காண்
நிமிர்புன் சடைமுடிமேல் நீரார் கங்கை
ஏற்றவன்காண் ஏழுலகு மாயி னான்காண்
இமைப்பளவிற் காமனைமுன் பொடியாய் வீழ
மாற்றவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 5

நிலையவன்காண் தோற்றவன்காண் நிறையா னான்காண்
நீரவன்காண் பாரவன்காண் ஊர்முன் றெய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தல்
தேன்மொழியை ஒருபாகஞ் சேர்த்தி னான்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் கயிலாய மென்னுந் தெய்வ
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 6

பெண்ணவன்காண் ஆணவன்காண் பெரியோர்க் கென்றும்
பெரியவன்காண் அரியவன்காண் அயனு னன்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
இசையவன்காண் இயலவன்காண் எல்லாங் காணும்
கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர் செல்லுங்
கதியவன்காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த
மண்ணவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 7

முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதலவன்காண் முடிவவன்காண் மூன்று சோதி
அன்னவன்காண் அடியார்க்கும் அண்டத் தார்க்கும்
அணியவன்காண் சேயவன்காண் அளவில் சோதி
மின்னவன்காண் உருமவன்காண் திருமால் பாகம்
வேண்டினன்காண் ஈண்டுபுனற் கங்கைக் கென்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 8

நெதியவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா
நீதியன்காண் வேதியன்காண் நினைவார்க் கென்றுந்
தியவன்காண் காரவன்காண் கனலா னன்காண்
காலங்கள் ஊழியாய்க் கலந்து நின்ற
பதியவன்காண் பழமவன்காண் இரதந் தான்காண்
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 9

பங்கயத்தின் மேலானும் பால கனாய்
உலகளந்த படியானும் பரவிக் காணா
தங்கைவைத்த சென்னியரா யளக்க மாட்டா
அனலவன்காண் அலைகடல்சூழ் இலங்கை வேந்தன்

கொங்கலர்த்த முடிநெரிய விரலா லூன்றுங்
குழகன்காண் அழகன்காண் கோல மாய
மங்கையர்க்கோர் கூறன்காண் வானோ ரேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 10

---

# திருஞானசம்பந்தர் அருளிச்செய்த
# தேவாரப் பதிகங்கள்

---

**பண் : பழந்தக்கராகம்**

ஒல்லையாறி உள்ளம்ஒன்றிக் கள்ளம்ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. 1

இயங்குகின்ற இரவிதிங்கள் மற்றுநல்தே வரெல்லாம்
பயங்களாலே பற்றிநின்பால் சித்தந்தெளி கின்றிலர்
தயங்குசோதீ சாமவேதா காமனைக்காய்ந் தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய் வலிவலம்மே யவனே. 2

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றன்நாமங் காதலிக்கின் றதுள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை வலிவலம்மே யவனே. 3

மெய்யராகிப் பொய்யைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே
நைவன்நாயேன் உன்றன்நாமம் நாளும்நவிற் றுகின்றேன்
வையம்முன்னே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. 4

துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ் சொல்லுவனுன் திறமே
தஞ்சமில்லாத் தேவர்வந்துன் தாளிணைக்கீழ்ப் பணிய
நஞ்சையுண்டாய்க் கென்செய்கேனோ நாளும்நினைந் தடியேன்
வஞ்சமுண்டென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே. 5

புரிசடையாய் புண்ணியனே நண்ணலார்மூ வெயிலும்
எரியஎய்தாய் எம்பெருமான் என்றிமையோர் பரவும்
கரியுரியாய் காலகாலா நீலமணி மிடற்று
வரியரவா வந்துநல்காய் வலிவலம்மே யவனே. 6

தாயும்நீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே. 7

நீரொடுங்குஞ் செஞ்சடையாய் நின்னுடைபொன் மலையை
வேரொடும்பீழ்ந் தேந்தலுற்ற வேந்தன்இரா வணனைத்
தேரொடும்போய் வீழ்ந்தலறத் திருவிரலால் அடர்த்த
வாரொடுங்குங் கொங்கைபங்கா வலிவலம்மே யவனே. 8

ஆதியாய நான்முகனும் மாலும்அறி வரிய
சோதியானே நீதியில்லேன் சொல்லுவன்நின் திறமே
ஓதிநாளும் உன்னையேத்தும் என்னைவினை அவலம்
வாதியாமே வந்துநல்காய் வலிவலம்மே யவனே. 9

பொதியிலானே பூவணத்தாய் பொன்திகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம் பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரென் றிவர்கள்
மதியிலாதா ரென்செய்வாரோ வலிவலம்மே யவனே. 10

வன்னிகொன்றை மத்தஞ்சூடும் வலிவலம்மே யவனைப்
பொன்னிநாடன் புகலிவேந்தன் ஞானசம்பந்தன் சொன்ன
பன்னுபாடல் பத்தும்வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னுசோதி யீசனோடே மன்னியிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலம்உறை யிறையே. 1

இட்டம தமர்பொடி யிசைதலின் நசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலம்உறை யிறையே. 2

உருமலி கடல்கடை வுழிவுல கமருயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்களம் உடையவன் மிடைதரும்
மருமலி பொழில்வலி வலம்உறை யிறையே. 3

அனல்நிகர் சடையழல் அவியுற வெனவரு
புனல்நிகழ் வதுமதி நனைபொறி அரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலம்உறை யிறையே. 4

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே. 5

தரைமுதல் உலகினில் உயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதக வதுஅரு ளினன்எழில்
வரைதிகழ் மதில்வலி வலம்உறை யிறையே. 6

கலிதரு தரைவர நடைவரும் இடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவன் எழில்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலம்உறை யிறையே. 7

இரவணன் இருபது கரமெழில் மலைதனில்
இரவண நினைதர அவன்முடி பொடிசெய்து
இரவணம் அமர்பெயர் அருளின னகநெதி
இரவண நிகர்வலி வலம்உறை யிறையே. 8

தேன்அமர் தருமலர் அணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நிலம் அகழ்அரி யடிமுடி
தானணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வான்அணை மதில்வலி வலம்உறை யிறையே. 9

இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையில் உணல்உடை யவர்களும் நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலம்உறை யிறையே. 10

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழில்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபதும் உயர்பொருள் தருமே. 11

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த
# தேவாரப் பதிகங்கள்

பண் – தக்கேசி

ஊனங் கத்துயிர்ப் பாய்உல கெல்லாம்
ஓங்கா ரத்துரு ஆகிநின் றானை
வானங் கத்தவர்க் கும்மளப் பரிய
வள்ளலை அடி யார்கள் உள்ளத்
தேனங் கத்தமு தாகிஉள் ளூறும்
தேசனைத் தினைத் தறகினி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 1

பல்லடி யார்பணிக் குப்பரி வானைப்
பாடிஆ டும்பத்தர்க் கன்புடை யானைச்
செல்லடி யேநெருக் கித்திறம் பாது
சேர்ந்தவர்க் கேசித்தி முத்திசெய் வானை
நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை
நானுறு குறை அறிந் தருள்புரி வானை
வல்லடி யார்மனத் திச்சையு ளானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 2

ஆழிய னாய்அகன் றேஉயர்ந் தானை
ஆதிஅந் தம்பணி வார்க்கணி யானைக்
கூழைய ராகிப்பொய் யேகுடி ஓம்பிக்
குழைந்து மெய்யடி யார்குழுப் பெய்யும்
வாழியர்க் கேவழு வாநெறி காட்டி
மறுபிறப் பென்னை மாசறுத் தானை
மாழையொண் கண்ணுமை யைமகிழ்ந் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 3

நாத்தான் உன்திற மேதிறம் பாது
நண்ணிஅண் ணித்தமு தம்பொதிந் தூறும்
ஆத்தா னைஅடி யேன்றனக் கென்றும்
அளவிறந் தபல தேவர்கள் போற்றும்
சோத்தா னைச்சுடர் மூன்றிலும் ஒன்றித்
துருவி மால்பிர மன்னறி யாத
மாத்தா னைமாத் தெனக்குவைத் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 4

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து

கல்வி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 5

பாடுமா பாடிப் பணியுமா றறியேன்
பனுவுமா பனுவிப் பரவுமா றறியேன்
தேடுமா தேடித் திருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்
கூடுமா றெங்ஙன மோஎன்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு
வாடிநீ வாளா வருந்தல்என் பானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 6

பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப்
படுக டற்பரப் புத்தவிர்ப் பானைச்
சந்தித் ததிற லாற்பணி பூட்டித்
தவத்தை ஈட்டிய தம்மடி யார்க்குச்
சிந்தித் தற்கெளி தாய்த்திருப் பாதஞ்
சிவலோ கந்திறந் தேற்றவல் லானை
வந்திப் பார்தம் மனத்தினுள் ளானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 7

எவ்வவர் தேவர் இருடிகள் மன்னர்
எண்ணிறந் தார்கள்மற் றெங்கும்நின் றேத்த
அவ்வவர் வேண்டிய தேஅருள் செய்து
அடைந்தவர்க் கேஇட மாகிநின் றானை
இவ்வவர் கருணைஎம் கற்பகக் கடலை
எம்பெரு மான்-அரு ளாய்என்ற பின்னை
வவ்விஎன் ஆவி மனங்கலந் தானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 8

திரியும் முப்புரஞ் செற்றதுங் குற்றத்
திறல ரக்கனைச் செறுத்ததும் மற்றைப்
பெரிய நஞ்சமு துண்டதும் முற்றும்
பின்னையாய் முன்ன மேமுளைத் தானை
அரிய நான்மறை அந்தணர் ஓவா
தடிப ணிந்தறி தற்கரி யானை
வரையின் பாவை மணாளன்எம் மானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 9

ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மாலுதி ரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவன் எளியவன்
தன்னைத் தன்னி லாமனத் தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 10

கலிவ லங்கெட ஆரழல் ஓம்பும்
கற்ற நான்மறை முற்றனல் ஓம்பும்
வலிவ லந்தனில் வந்துகண் டடியேன்
மன்னும் நாவலா ரூரன்வன் றொண்டன்
ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும்
உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்போய்
மெலிவில் வானுல கத்தவர் ஏத்த
விரும்பி விண்ணுல கெய்துவர் தாமே. 11

## அருணகிரிநாதர் அருளிச் செய்த

# திருப்புகழ்

---

தொடுத்த நாள்முதல் மருவிய இளைஞனும்
இருக்க வேறொரு பெயர்தம திடமது
துவட்சி யேபெறி லவருடன் மருவிடு பொதுமாதர்
துவக்கி லேயடி படுநறு மலரயன்
விதித்த தோதக வினையுறு தகவது
துறக்க நீறிட அர்கர வெனவுள மமையாதே
அடுத்த பேர்மனை துணைவியர் தமர்பொருள்
பெருத்த வாழ்விது சதமென மகிழ்வுறு
மசட்ட ஞதுலன் அவமது தவிரநி னடியாரோ
டமர்த்தி மாமலர் கொடுவழி படஎனை
யிருத்தி யேபர கதிபெற மயில்மிசை
யரத்த மாமணி யணிகழ லிணைதொழ அருள்தாராய்
எடுத்த வேல்பிழை புகலரி தென எதிர்
விடுத்து ராவணன் மணிமுடி துணிபட
எதிர்த்து மோர்கணை விடுமொரு காதலன்
மருகோனே
எருக்கு மாலிகை குவளையி னறுமலர்
கடுக்கை மாலிகை பகிரதி சிறுபிறை
யெலுப்பு மாலிகை புனைசடி லவனருள் புதல்வோனே
வடுத்த மாவென நிலைபெறு நிருதனை
அடக்க ஏழ்கட லெழுவரை துகளெழ
வடித்த வேல்விடு கரதல ம்ருகமத புயவேளே
வனத்தில் வாழ்குற மகள்முலை முழுகிய
கடப்ப மாலிகை யணிபுய அமரர்கள்
மதித்த சேவக வலிவல நகருறை பெருமாளே.

---

# வலிவல மும்மணிக் கோவை

## காப்பு

(வெண்பா)

மாமா துறையும் வலிவலத்து வாழ்வுகந்த
கோமான்மேன் மும்மணிக் கோவைக்கு — நாமாது
தும்பைச்செம் பொற்கொன்றைத் தொங்கற்சம் புத்தந்த
கம்பக்கும் பத்தும்பல் காப்பு.

## நூல்

(அகவல்)

1. பூவிரி கமல மேவரு பொகுட்டு
வட்டணை யிருந்த முட்டாச் செல்வத்து
வெண்ணரைக் குடுமிப் பண்ணவக் கிழவன்
சதுமறை முறையுளி வதுவைவினை தொடங்கத்
தாமரை பழித்த கைமருங் கமைய
அசும்பிருந் தொழுகும் பசும்பொ னணியாத்
தேழ்பெரும் புடவிப் பாலிகைப் பொலிந்து
நந்தா மரபிற் செந்தீ யோம்பப்
பசுந்துழா யணிந்த செங்கணெடு மாயோன்
வெண்பொரி யேந்தி யன்பொடு தூவ
அடர்பொற் சிரகங் கரமலர் தாங்கி
இமைய மாதுல னுதகம் வார்ப்ப
அமையா நோக்கி னிமையா நாட்டத்
தெல்லொளி வானவர் பல்லாண் டிசைப்பப்
பாயிருள் பருகிப் பகலெதி ரெடுக்கும்
ஆயிரு திறத்த அவிர்கதிர் மண்டிலம்
நந்தா விளக்க முந்துவந் தெடுப்ப

வடவரை முதல தடவரை நெடுங்கால்
விதானமந் தாகினி விண்கா வணத்தில்
இருவரு மும்முறை யெரிவலஞ் சூழ்ந்து
பொற்றா மரையிற் பொலிந்தசெஞ் சீறடி
கற்றா மரையெனக் கரங்கொடு கோலிச்
செம்பொற் சதங்கை சிலம்பொடு புலம்ப
அம்மிமிசை யேற்றிச் செம்மையி னிறுவி
வடதிசை யொருமீ னிருவரு நோக்கி
உலவாக காத லுவட்டெடுத் தொழுக
மணவினை முற்றி மகிழ்தூங் குளத்தின்
இடப்பால் வைத்த விமய மாதுமை
மாழையுண் கண்ணி கேள்வநீ கேண்மோ
சுரிமுகப் பணிலஞ் சூலுளைந் தலறி
மரைமலர்ப் பழனத்து வயின்வயி னுயிர்த்த
பொழிகதிர் நித்திலம் புதுநில வெறிப்பச்
சேற்றிடைத் தவழுந் தோற்ற மூற்றிருந்
தாரமு துறைக்கும் பூரண மதியம் .
நீனிற வானத்து மீனின மிளிரச்
செல்வது பொரூஉந் தொல்லியல் வழுவா
மல்லலஞ் செல்வ வலிவல மூதூர்
நண்ணிவாழ் மனத்துணை நாதனீ யாதலின்
யானொன் றுணர்த்துவ துளதே யாதெனின்
வெண்ணகைச் செவ்வாய்ப் பைந்தொடி மகளிர்
கருங்கண் வலையிற் கட்டுண்டு கிடப்பினும்
ஆரா வியற்கை யவாமேற் கிளைப்பத்
தீரா வாசைத் திரைக்கட லழுந்தினும்
எண்ணில் கோடிப் பல்வகைச் சூழ்ச்சி
கணத்திடை யியற்றிக் கறங்கெனச் சுழலினும்
கரவு பூண்ட கையற் பாற்சென்
றிரவுபூண் டீகென வேக்கற்று நிற்பினும்
அந்தர வுலக மவனி யாக

இந்திர செல்வ மெய்திவீற் றிருப்பினும்
அத்திற னன்றி யனந்தபல் கோடி
எத்திற னெத்திற ணிசையினு மென்மனம்
முண்டத் திலங்கும் ணிசையினு மெண்மனம்
எண்டகு சிறப்பிற் கண்டிகை மாலையும்
ஓதுமஞ் செழுத்தி னுண்மைநெஞ் சழுத்தும்
ஓடியா நேயமு முடையநின் னடியர்
யாவ ராயினு மாகயா னவரத்
தேவ ரென்றே சேவடி தொழூஉம்
அன்புதந் தருளல் வேண்டும்
என்பெரு வரமு மிதுவலி தின்றே.

( வெண்பா )

2. இன்றுசென்ற தின்றுசென்ற தென்றுநெடுங்
காலமெல்லாம்
சென்றதன்றி யாதுநெஞ்சே செய்துகொண்டாய் —
கலிவலத்தை யெய்தியே காயாம லீசன் [ கன்றிக்
வலிவலத்தை யெய்தியே வாழ்த்து.

( கட்டளைக் கலித்துறை )

3. வாழ்வாய் மனத்துணை நாதனை வாழ்த்தி வலிவலமே
சூழ்வா யவற்குத் தொழும்புசெய் வாய்மும்மைத்
துன்பவெள்ளத்
தாழ்வாய்வெங் காமச் சுறவேற்றி னேறுண்
டலைந்தலைந்து
வீழ்வாய் மடநெஞ்ச மேயினி யாயினும் வீடெய்தவே.

( அகவல் )

4. எய்த வைங்கணைக் கைதவக் காமனை
வண்ண நுங்கிய கண்ணுதன் முதல்வ
பார்ப்பனச் சிறுவற் கருளூற் றிருந்து
கூற்றுயிர் குடித்த குரைகழ லிறைவ

மாளா திமையோர் வாரிவாய் மடுத்த
காள மாசின் வாளவிர் மிடற்ற
பலபே ரூழி பல்கினு முற்றா
தொருநிலை நின்ற மதிமுகி ழதனொடு
செந்தழல் வயின்வயின் வெண்பொரி மிளிர்ந்தெனத்
தும்பையம் போதலர் செஞ்சடைப் புனித
இருநிலம் பொதிந்த வெருபொரு நோன்றாள்
வண்டுழாய் முகுந்தனு முண்டகத் திறைவனும்
ஏனமு மன்னமு மாகி யானா
திருதா ளாய வொருதாள் வனசமும்
வளர்சடைக் கானமும் வழிபிழைத் தவரென
எண்ணில் கால மண்ணகங் கிளைத்தும்
விண்ணகந் துருவி மேற்படக் கிளர்ந்தும்
காணா ராகி நாணமீ தூர
ஆதியு மந்தமு மளவையு மொரீஇச்
சோதி யாகித் தோன்றிய வொருவ
போக பூமி யாமெனச் சிறந்த
ஏகச் சக்கர வெழினகர்க் கதிப
சொல்லரும் பேரிசை நல்லவர் பழிச்சும்
பல்லவம் பொதுளிய வில்லவன நாத
நீளயின் மருட்டு மாழையுண் கண்ணி
கேள்வ னாகிய மீளியஞ் செல்வ
ஊழி யூழி யுலவாக் காட்சி
வாழி வாழி மனத்துணை நாதவென்
றுன்னடிக் கமல மென்முடிச் சூட்டி
வேண்டுவ தொன்றுள தீண்டது வினவிற்
கல்லா லெறிந்த பொல்லாப் புத்தனும்
செருப்பதைப் பணித்த பொருப்பிடைப் புளிஞனும்
ஒருகா லன்றி யூடல் தீர
இருகா லிரவி லேவிய வொருவனும்
பிழைத்தன பொறுத்தல் போல நாயேன்

இழைத்த தீவினை யாவையும் பொறுத்து
நின்னடி யாருடை நெடுங்கணக்கின்
என்னையுங் கடைமுறை யெடுத்தெழு துவதே.

( வெண்பா )

5. எழுதாக் கிளவிக்கு மெப்பொருட்குஞ் சேய்த்தாய்
முழுதாய்ப் பரந்தாலு முற்றும் — கழிபோர்
நலிவலத்தா னற்றினா னற்றுணைவன் காணா
வலிவலத்தா னென்மனத்தான் வந்து.

( கட்டளைக் கலித்துறை )

6. வந்தது மாலை புகுந்தது போது வடவைச் செந்தீக்
கொந்தது போலக் கொதித்தது திங்கட் கொழுந்துமனம்
நொந்தது கொன்றை வனத்தாரத் தார்நல்க நோக்க மொன்றும்
தந்தில ரென்கொன் மனத்துணை யாரென்று சாற்றுபவே.

( அகவல் )

7. வேயெனப் பணைத்த தோளு மாய்மயிற்
பெடையெனச் சிறந்த சாயலு மடமருள்
மானெனக் கிடந்த நோக்கமுந் தேனென
அமிழ்தூற் றிருக்கு மழலையங் குழலிசை
வண்டுபாட் டயருங் கொண்டையுந் தொண்டையஞ்
செவ்வாய் வனப்பு மூரல்வெண் முத்தும்
உற்பல மலர்ந்த வற்புதப் பதுமமும்
இடுகிடை யொல்க வடிபரந் தெழுந்து
கச்சு வீசிய முற்றா முலையும்
இல்லவ ரெள்ளிய நலனுடை யடியும்
ஓவியம் பெற்று மேவிய தன்ன
மாழையுண் கண்ணி மாதுமை பாக
கடன்மடை திறந்தெனக் கனைகடாஞ் செருக்கிய
யானைமுக வவுணன் றானையொடு முடியச்
சிறுகட் டீயுமிழ் தறுகட் சீற்றத்

துறுகா லசைக்கு மடிசெவிப் பிள்ளையும்
அன்றிற் குன்றமு மாம்பன்முக வவுணனும்
முடங்குளை மடங்கன் முரண்முகத் தவுணனும்
தானவர் குழீஇய சேனையங் கடலும்
வேரொடு மடியச் சூர்முத றடிந்த
செவ்வேற் சேயுஞ் சேயெனப் படைத்த
மன்றலங் கொன்றை வனத்துறை நாயக
கலிவலந் தொலைச்சிய வலிவல முகந்து
மன்னிவீற் றிருக்கும் மனத்துணை நாத
வேதப் புரவி விரிஞ்சன் செலுத்த
முடங்குதிரைப் பரவைக் கிடங்கெனுங் கிடுகுடை
நெடுங்காற் புடவிக் கடுந்தே ரேறி
முப்புரங் கடந்த ஞான்று துப்புடன்
இருகால் வளைய வாங்கி யொருகால்
வரியுடற் கட்செவிப் புரிநாண் பிணித்துக்
குடுமி யாயிர வடவரை குழைத்தோய்க்
கயலா யென்மனங் குழைப்ப
தியலா தென்ப திறும்பூ துடைத்தே.

(வெண்பா)

8. உடையார் வலிவலஞ்சே ருன்மத்தர் பூதப்
படையா ரவர்பரிசு பாரீர் — கிடையாதோ
ஏறுவ தேறா மெடுப்பது பிச்சையாம்
கூறுவ தேறாங் குணம்.

(கட்டளைக் கலித்துறை)

9. தேறாத யாவுந் தெளிவிக்குந் தேறெனத் தேறிநின்று
கூறாத நூலிங்குக் கூறவுண் டோவெண்ணில் கோடிவிண்ணோர்
மாறாத வண்ணநஞ் சுண்டே வலிவலம் வாழ்வுகொண்டார்
ஆறாத செம்மை யரக்கூட்டி யன்ன வடித்தலமே.

## ( அகவல் )

10. அடித்தலம் படுத்தி யகனில முழுதும்
இசைமிகு செங்கோல் திசைதிசை யளப்ப
வெண்குடை நிழற்ற விரவலர் பணிய
ஆழியொன் றுருட்டி யரசுவீற் றிருக்கும்
பாழியந் தடந்தோட் படைவலி வேந்தரும்
அன்னவர் தலைத்தா ளணுகவு மஞ்சி
இன்னபோ திவ்வுழி யேகுமென் றறியாது
கடைக்கண் ணோக்கிற் கலந்தே கைவிரற்
புடைப்பெயர்வு நோக்கிப் போற்றுபு நின்று
சிறுகுற் றேவ னனிதவப் புரிந்தும்
கவிகை தாங்கியுங் காற்செருப் பெடுத்தும்
சிவிகை காவியுஞ் சேவடி வருடியும்
மிச்சிலூண் மிசைந்து மிச்சையி னிசைந்தும்
பிணப்பொதி சுமந்தும் பேரழ லட்டும்
மயிர்களைந் தொழுகியு மாசுடை யொலித்தும்
அன்னையு முடன்பிறந் தாளுந் தனையையும்
பின்னையு மனையவர் தம்முறை பிறழ
அவனி காண வல்லது புரிந்தும்
மறந்தே யாயினு மாநிலத் தெவர்க்கும்
இறந்தே யின்னாங் கியற்றுவ தறியாக்
குறுமுய னெடுமான் மறியின மயிலை
இன்னவை முதல தன்னளிக் குரியன
இனம்பிரிந் திரங்கி யிருகணீர் வாரா
அம்ம வோவென் றங்காந் தலற
ஞாளி கொண்டும் நாந்தகங் கொண்டும்
மீளி கொண்டும் விற்படை கொண்டும்
வலைமேற் கொண்டும் வன்க ணெய்திக்
கொலைமேற் கொண்டு கொடுந்தொழி லியற்றியும்
பிறன்சோர் பெண்ணிப் பின்விளை வெண்ணா
தறனழித் தயன்மனை யரும்பொருள் வௌவியும்

நடந்துசெல் வம்பலர் மடங்கிட நோக்கி
அடர்ந்து பின்றொடர்ந் தாறலை செய்தும்
இன்னா செய்யி னின்னா வாமெனப்
பன்னா மரபி னன்னவை பிறவும்
கைதூ வாது வைகலு மாற்றித்
தூரா வயிற்றுத் தொடுகுழி தூர்ப்பான்
நிச்ச நிரப்புறு மச்செயன் மாந்தரும்
வரிவளை யறையின் வாலரி யட்ட
புலியுகிர்ப் புழுக்கல் பொற்கலத் தேற்றி
இழுதில் வெந்த பழுதில்பல் காயம்
அமைத்தகுய் நறும்பொடி சுமத்துவ செய்த
வெருக்குக் கண்ணின் மேவரு பொரியல்
கறிச்சேறு கமழு மறுப்பருந் துவையல்
இளையசிற் றுண்டி இடையிடை சேர்த்தி
முளைதலி னறுநெய் முறைமுறை வார்ந்து
பெருகுதொறும் பெருகுதொறு மருகுசேர்த் தமைத்த
வளைமுறி வெள்ளயிர் வரம்பு கோலிக்
குயவரி யடியுறழ் கொடும்புறத் தீங்கனி
சுடுபொன் னன்ன படுசுளைப் பனசம்
தேன்றிரன் டனைய வான்சுவை மாங்கனி
வெண்மை குன்றா வண்மைத் தாகப்
பாலுலை யாக்கிய வாலிய தோரியுடன்
அமிழ்துகுழைத் தாங்குத் தமிழ்பெற மயக்கி
இவ்வகை யடிசில் கைவயி னேந்தி
உண்ணென விரப்பினு முடன்பட் டுண்ணா
வேழத் தன்ன தாழாச் செல்வரும்
எடுத்தய வெறியு மெச்சிற் கிமையா
தடுத்திடு ஞமலியி னவாமீ தூர
எத்திறத் தடிசி லென்பதுந் தேறா
தத்திற நாடி யார்வமுற் றோடியும்
மைந்தரைப் பகர்ந்து மனைவியை நொடுத்தும்

தந்தமை விற்றுந் தப்பசி தணித்தும்
வாயதச் சிறையின் மாசுண்டு பிதிர்ந்து
வேற்றிழை நுழைந்தும் வெள்ளிடைத் தாகிக்
கடித்தல மன்றிக் காப்பதை யறியா
மடித்தல மொருகை வைத்துமற் றொருகை
அடகின் மீதுவைத் தண்ணாந் துறீஇ
உப்பிலிப் புற்கைக் குதவி யாகக்
கண்ணுறை பெறாது பண்ணற வட்டு
மருங்குசேர் சிதவற் கருங்கலத் திட்டு
விரிசுடர் குவிக்கு மின்மினி விளக்கின்
எரிபசி யகல வெடுத்தெடுத் தருந்தியும்
அவ்வகை யன்றி யழிபசி தீர
எவ்வகை யாலு முய்வகை நோக்கிக்
கால மூன்றினுங் கண்பட லின்றி
ஞாலத் துழலு நல்குர வாளரும
பார்ப்பன வாகை சூடி மேற்படு
கல்வி நீள்கடற் கெல்லை யாகி
ஒழுக்கமும் விழுப்பமு மழுக்க றாமையும்
தானமுந் தவமு மானமும் பொறையும்
தூய்மையு மின்சொலும் வாய்மையு நிறையும்
உடைய ராகிய தடையி லறிஞரும்
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்ட
சிற்றினந் தழீஇத் தீத்தொழில் பயின்று
கொண்டது விடாது கொடிற்றியல் பெய்தி
இம்மையு மறுமையு மெவையு மில்லென
அறிவறை போகிய நெறியறு மனத்துப்
பொல்லா தல்லது கல்லா மாக்களும்
இனைய வன்றியு நினைவருந் திறத்து
மாறுமா றாகிய வேறுவே றியல்பின்
ஒருவரை யொருவ ரொவ்வா ராகி
உயர்ந்துந் தாழ்ந்து முற்றோ ரனைவரும்

என்ன காரணத் திசைந்தன ரென்ன
முன்னை யேது முடிந்ததை வினவின்
கேளினி வாழி கெடுகநின் கவலை
அடையலர்க் கரிய னடியவர்க் கெளியன்
முடிவு முதலு மூர்த்தமு மில்லோன்
பிறப்பற வெறியு மறப்போர் வாழ்க்கையன்
சிறப்புடை யெவரினுஞ் சிறந்த மேலோன்
நிரந்தர னிராமய னிரஞ்சன னிராகுலன்
வரந்தரு பவர்க்கும் வரந்தரு வானவன்
அரியதி னரிய னணுவினுக் கணுவாய்ப்
பெரியதிற் பெரிய னாகிய பெற்றியன்
தினைத்துணை யன்பு செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கிப் பயன்கொடுத் தருள்வோன்
அணிதார் பொருது மகன்மார் புழக்கியும்
சிறையரி வன்பகை தீர்ப்பது செய்வான்
முலையென வருமிரு முரட்குவடு சுமந்த
பொற்றொடிப் புலோமசை நற்றளிர்ச் செங்கைப்
பைஞ்சிறைக் கிள்ளையுந் தஞ்செனப் பணிந்து
விண்ணவர் பழிச்சு மண்ணல் யானையும்
கோதவு முரிப்பவுந் தாற்றிடைப் பழுத்த
அரம்பையுங் கரும்பு மொருங்குவிண் ணளாவும்
அள்ளற் பழன மருகுசூழ் கிடந்த
மல்லற் செல்வ வலிவல முகந்தோன்
மாழையொண் கண்ணி கேள்வன் யாளி
அதளுடை யொருவன் மதவரை யடர்த்தோன்
தனைத்துணை யென்றே தாண்மலர் வழுத்துநர்
மனத்துணை யாகிய வானவன் பதயுகம்
வணங்குநர் வணங்கா ரென்ப
நுணங்கிய கேள்வி நுனித்தமே லவரே.

( வெண்பா )

**11.** மேலைத் தவமினியென் வெண்ணீறிட் டஞ்செழுத்தாற்
காலைக் கடன்கழித்துக் கண்ணுதலான் – நூலையே
வாசிப்பா மெந்தை வலிவலத்தை யேவாழ்த்தி
நேசிப்பாம் வந்திப்பா நின்று.

( கட்டளைக் கலித்துறை )

**12.** நிற்பன செல்வன யாவையு மாயிந் நிலவுலகிற்
கற்பன கேட்பன வெல்லாங் கழித்துக் கடைமுறைக்கே
சொற்பன மாயின கண்டேன் வலிவலத் தொன்னகர்வாழ்
விற்பன னேயினி நின்னருளே துணை வேறிலையே.

( அகவல் )

( அரச வாழ்க்கை )

**13.** இலைத்தொழிற் பைம்பூ ணேந்திய முலைத்தடம்
சுமக்க லாற்றாது துளங்குபு நுழைநுசுப்
பிறுமிறு மென்றுங் கினவளை யேங்க
அஞ்சி லோதித் துஞ்சுபு கிடந்த
பொறிவண் டெழுந்து பொம்மென விரங்க
வதனபுண் டரிகத்து வனப்பு நோக்கிக்
கதுமென முகமதி கதிர்க்கரம் விரித்தாங்
கோவிய மனைய பாவையர் களித்து
வீழிவா யரும்பி யேழிசை முகிழ்ப்ப
வாழி பாடி யூழ்முறை யோச்சி
அம்பொற் காம்பின் மணித்தலை யவிழ்ந்த
உபய சாமரை புடைநின் றிரட்ட
மருங்குநின் றொதுங்கி மணிக்குழை கிழிக்கும்
கருங்கயற் கண்ணியர் வெள்ளடை யுதவப்
பைம்புயல் பொரூஉம் வம்பவிழ் கோதையர்
அம்புயப் பொகுட்டி னங்கைத் தாங்கி

வனைமுலை வள்ள மன்றி வாய்மாற்
றுமிழ்பொலன் வள்ள முவந்தன ரேந்தத்
தகர வார்குழற் றையல ரொருபால்
மகரயா ழமுதஞ் செவிவாய் மடுப்பக்
கற்பகக் கொம்பர் பொற்புடை யரங்கில்
நாடகம் புரிந்தெனப் பாடகச் சீறடி
அரிவையர் சதிமுறை நடிப்பச் சொரிதரு
நவமணி ராசியுந் தமனியக் குவையும்
திறையென வளந்து செருவிக லரசர்
மணிமுடி யிறைஞ்சி யிணையடி வழுத்த
ஒருதனிச் செங்கோ லிருநில மளப்ப
வெண்குடை கருங்கடன் மேதினி நிழற்றச்
சிங்கஞ் சுமந்த பைம்பொற் றவிசின்
வீற்றினி திருக்கு மாற்றருந் துப்பின்
வாகை வேந்தர் வாழ்க்கையு மதாஅன்று

( போகபூமி வாழ்க்கை )

பன்னீ ராட்டைக் கன்னிமங் கையரும்
பதினா றாட்டை யதிர்கழற் குமரரும்
இச்சையி னிசைந்தன துய்த்தனர் களித்துப்
பொன்னணிந் திலங்கு நன்னர்மா டத்தும்
மின்னவிர் சோதி வெள்ளிமண் டபத்தும்
விளிம்புபளிங் கியாத்த பசும்பொன்மே டையினும்
ஆடகக் குன்றினு நாடக வரங்கினும்
அரமியத் தலத்தினு முரவுநீர்த் தரங்க
வாவியங் கரையினும் பூவியன் பொதும்பினும்
சந்தனக் காவினு நந்தன வனத்தினும்
பாடலு மாடலும் பயின்றன ரிகலி
ஊடலு முணர்த்தலுங் கூடலு நயந்து
புணர்தொறும் புணர்தொறும் புதிதுபுதி தாக
வணர்கருங் கூந்தல் வனிதையர் நலத்தின்

அன்பு மற்றை யின்புமீ தூர
எண்ணில் காலஞ் செல்லினுந் தத்தம்
வண்ணஞ் செல்லா மாண்பின ராகி
நொடிவரை யென்பதை யென்னை பின்னைத்
துடிபல வகுத்த பொழுதிடைப் படாஅ
தானாது நுகரு மானாச் செல்வப்
போக பூமிப் போகமு மதாஅன்

(வேறு நல்வாழ்க்கைகள்)

றுலகுடன் விளக்கு மிலகொளி மண்டிலத்
தாறிரண் டருக்கர் வீறுபெறு திருவும்
மருத்துவர் நிலையும் வசுக்கள் வாழ்க்கையும்
உருத்திர ருலகமு மொளிமதித் தோற்றமும்
அங்கி யாற்றலு மந்தக னாட்சியும்
நிருதியி னியதியு நெடும்புன லதிபன்
மாயாச் சிறப்பும் வாயு வாழ்க்கையும்
வெறுக்கைக் கிழவன் மேதகு செல்வமும்
ஈச னியற்கையு மாசுடைத் துயர்ந்த
உருப்பசி திலோத்தமை கருப்புரச் செவ்வாய்
அரம்பை மேனகை யாங்கவர் மேலோர்
செய்தகுற் றேவ லெய்தின ரியற்றச்
சுரபியு மணியு நவநிதி ராசியும்
விரவின துவன்றி வேண்டுவ வேண்டுவ
கடைக்கட் குறிப்பிற் கதுமெனப் போற்றி
இடைப்பட லின்றி யேவல் கேட்ப
விண்ணவர் மகுட பந்தியி னிபுடம்
எண்ணிட விடனு மில்லெனக் குழுமி
முடித்தல மிறைஞ்சி யடித்தல முரிஞ்ச

நான் மருப்பியானை வான்பிட ரேறி
*..........................................................
..........................................................
..............................நற்பால் வினையும்......
..........................................................
..........................................................
...................... வெயிலின் வெம்மையும்.......

(மனித வாழ்க்கை)

கருக்குழி யழுந்தலும் பிறப்புடைத் துன்பமும்
சிறுஅர்ப் பருவத் துறுஅப் புன்கணும்
காமக் கவலையுங் கையற் றினைதலும்
நாமநீர்க் கடலிடை நாவாய்ச் சேறலும்
உடற்றுவெம் பசியு மடங்கருஞ் சினமும்
நரைவரு தீமையுந் திரைவரு மிகழ்ச்சியும்
வாயி விழிபு மனத்தடு மாற்றமும்
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்தெற லொருவன்
பிணிக்குங் காலைப் பெயர்ப்பருந் துன்பமும்

(நரகவேதனை)

போதுங் காலை யாதனை யனைத்தும்
நிரய வுலக நெறிகடந் தடைந்தபின்
கும்பி பாகமுங் கோரமும் வெம்பி
அடல்செய் ரவுரவ மாங்கது முளப்பட
அள்ளியிட் டனைய முள்ளுடை யிலவம்
தழீஇ யேறுந் தாங்கரும் பீழையும்
தாரை யொள்வாள் சக்கரந் தாங்க
விழுந்து மெழுந்தும் விரைந்தனர் நடந்தும்
வீயா துழலும் விழுமமுங் காயமற்

---

* இங்கே சில அடிகளும், சில அடிகளின் பகுதியும் கையெழுத்துப் பிரதிகளிலேயே காணப்படவில்லை.

பகுவாய் வெம்புலி பாய்தொறும் பாய்தொறும்
குதுகுதுப் பெய்திக் குலைகுலைந் தஞ்சலும்
பொடித்தசெந் நெருப்பினும் வறுத்தவெண்
மணலினும்
காய்ந்தவெந் நீரினுங் கனற்றிய நெய்யினும்
செப்புவட் டுருக்கிய தீயவெங் களியினும்
பங்க மலவலை பொங்கிய வுவர்நீர்
இடக்க ரீளை கடக்கரு முழுத்தசை
சோரி யின்ன வாரிபெய் கூவலிற்
கழுகின்வட் டத்துங் காகவட் டத்தும்
மசகவட் டத்து மீயின்வட் டத்தும்
பொறுப்பரி தாய துறப்பருந் துயரமும்
மாட்டுசந் திகளின் வசியறைந் தெறியும்
கோட்டரும் பீடையிற் குரங்குபு கிடத்தலும்
காவலி னெரீஇக் கான்மேற் பிணித்து
வாவலிற் றூங்கும் வான்கழி துன்பமும்
இனைய மாலைய நினைவரு மிடும்பை
தொடாஅ தல்லது விடாஅ வென்னும்
பார்ப்பார்த் தப்புதன் முதலிய பகுதித்
தீப்பால் வினையு மாகிய திறத்த

( இருவினை இயல்பு )

கழைசுளி தறுகட் கடாஅ யானை
இரண்டென துயிர்வெளி லொன்றிடை பிணித்தலும்
ஒன்றே மேன்மே லூக்குவ தொன்றே
கீழ்கீ ழூக்குவ தாதலின் மன்னோ
படுமழை தலைஇய பானாட் கங்குலின்
இடுதிரைப் பௌவத் திடைப்புக் கழுந்தும்
கட்பொறி கதுவா துட்பொறி மயங்கிய
அற்புத வூமன் போலமற் றளியேன்
புலம்புகொண் டழுங்கி யிரங்கா வண்ணம்

( வேண்டுகோள் )

வால்வளைக் குலங்கள் வயிறுளைந் தலறிச்
சூன்முதிர்ந் துயிர்த்த சோதிவெண் ணித்திலம்
அம்பொற் றகட்டகட் டாடகப் பொகுட்டுப்
பைம்பொற் கமலப் பாயல்கொண் டுவந்து
கருவென வயிர்த்துக் குருகடை கிடக்கும்
வயல்விளிம் புடுத்த வலிவல மூதூர்
தழையவந் தருளிய தண்டாச் செல்வ!
வானவர் தலைவ! மனத்துணை நாத!
கானம ரிதழிக் கானகத் திறைவ!
மால்விடைப் பாக! மதியுடைப் பாக!
சேல்விழி யிமயத் திருந்திழை பாக!
வாரண மடர்த்த காரணன் நீயே
ஆதலி னிதுமற் றம்ம நமக்கோ
அடாஅ தென்னப் படாஅ தன்றே
காய்சினந் திருகிக் கடாங்கவிழ் வேழத்
துகளம் பிணித்த நிகளமுந் துகள்படத்
துடக்கிற் சிமிழ்த்த விடற்கரும் பிணிப்புன்
தடக்கை யாற்றலின் விடுத்தனை செய்கென
வேண்டுவ னின்பத முளரி
ஆண்டகை யளியேற் கருள்வதுன் கடனே.

( வெண்பா )

14. கடமான் வினவிக் கலைவினவி நவ்வி
மடமான் வினவியே வந்தார் — இடமான்
உழைசேர் வலிவலத்தா ரொண்பூஞ் சிலம்பர்
தழைசேர் வலிவலத்தார் தாம்.

(கட்டளைக் கலித்துறை)

15. தாமே தமக்கு நிகராய் வலிவலந் தானுகந்தார்
ஆமே யெவர்க்கு மதிகர்விண் ணூடு மவனிபுக்கும்
பூமே லவனு மவன்றா தையுமுன்னம் போந்தகதை
நாமே யுரைத்தல்செய் தாமுரை யாநிற்கு நான்மறையே.

(அகவல்)

16. மறைநெடு முடியினு மடியவ ருளத்தினும்
உறைதரு கருணை நிறைதரு மிறைவ!
கொன்றைதேன் றுளிப்பச் சென்று சென்றலம்பிக்
கங்கைநீர் துளும்பப் பொங்குதிரைத் தீநீர்
நுரைவழிந் தன்ன விரைசெறி தும்பைத்
தெரியல்போ தவிழ்த்துப் புரிசடை சரியத்
தூற்றிய வமுதத் துளிதெறித் தாங்கு
வீற்றுக் கிடந்த வெள்ளிவெண் புள்ளி
மறிமா னெழுந்து குடிபுக வூக்கப்
பொறிப்பணம் விரித்துக் கறுப்பணர் காட்டி
இரையெனத் தலையெடுத் துரகமங் காப்பக்
குறைமதி சுழன்று நிறைமதி யேய்ப்ப
அரவமும் புலியும் பரவியென் புருக
மன்றி லாடிய மென்றாட் பதும!
அரக்குவழித் தன்ன உருக்கிளர் கமலம்
வரியளி முரலப் புரிமுறுக் கவிழ்தொறும்
தடந்தீப் பட்டெனத் தன்சிறை விரித்துப்
பார்ப்பினந் தழீஇய பானிற வன்னம்
மயிலுடன் வதியும் புயல்வளர் பொதும்பர்
மருங்குசூழ் கிடந்த வலிவல மூதூர்
வீற்றிருந் தருளு மாற்றருஞ் செல்வ!
சின்மலர் தூவிநின் பொன்னடி போற்றி
என்னுடைச் செய்தி பன்னுவன் கேண்மதி

( தீச்செயல்கள் )

அன்பிற் றீர்த லருளொடு படாமை
தெருளாக் காட்சி செய்தநன் றயர்த்தல்
பெரும்பொறை தவிர்தல் பிறன்பொருள் விழைதல்
பட்டிமை பயிறல் பாலிற் கோடல்
மான மதாணி பூணது மறுத்தல்
அழுக்கற் றினைத லவாக்கடல் படிதல்
அறங்கூ றாமை புறங்கூறு விரித்தல்
பொய்யுரை படித்தல் மெய்யுரை விடுத்தல்
கல்வியிற் றிறம்பல் கடுஞ்சொல் வடித்தல்
இன்மொழி மறுத்த லிறைவனூ லிகழ்தல்
பயனில கூறல் பணிமொழி நயவாமை
தவவினை துறத்தல் தானந் தீர்தல்
படைமடம் படுதல் கொடைமடம் படாமை
அறிமட மின்மை நெறிகடந் தடர்தல்
தெய்வத மிகழ்தல் தீத்தொழி லியற்றல்
ஐம்பெரும் பாதகத் தளறுபாய்ந் தழுந்தல்
இந்தியப் பெரும்படைக் கிரிந்துபுறங் கொடுத்தல்
பாற்படு பகுதியிற் பகுத்துண் ணாமை
பிறர்மனை விழைந்து பிழைத்தன புரிதல்
சிற்றினஞ் சேர்தல் செய்தவர்க் கடிதல்
கைதவ வேடஞ் செய்வன செய்யாமை
ஆதி யாய தீதடர் செய்கை
சொன்ன வன்றிச் சொல்லாது கிடந்த
இன்ன பிறவு மெண்செயன் மன்னோ
எண்ணினை பெய்த வீட்டிய விவ்வினை
உண்ணி னல்ல தொடிவது மன்றே.
ஒடியா தாக வடைவது மின்றே
அந்தமி லின்பத் தழிவில் வீடே
நொந்தனன் காமதி யெந்தையென் றிரங்கவும்
வந்துநீ தண்ணளி வழங்கவு மிலையே

நீமனத் துணைவ னாதலின் யான்செயும்
இச்செயற் காதி யெளியேன் மனனே
ஆயினு மதற்கு மாதிநீ யாதலின்
யானினிப் பொறுக்க லாற்றேன் முறையிட்
டென்செய லனைத்து நின்செய லாமெனப்
பலரவை யேறிநின் றுன்னை
அலர்தூற் றுதினி யமைகலன் யானே.

(வெண்பா)

17. யானே யடிமை யெனையடிமை கொண்டவனீ
தானே வலிவலஞ்சேர் தாணுவே — ஊனே
எடாத படிகாத் தெடுப்பி னிலம்பா
டடாத படிகாத் தருள்.

(கட்டளைக் கலித்துறை)

18. அருளு மடக்கமும் வாய்மையு நல்ல வறிவுமுண்மைப்
பொருளு மொழுக்கமும் யாதென்று கேட்பிற் புலம்புகொண்டு
மருளு மடநெஞ்ச மேயஞ்ச லீசன் வலிவலமே
தெருளு மியல்பி னிறைஞ்சியு மேத்தியுஞ் சிந்திப்பதே.

(அகவல்)

19. தேனலர் கொன்றைத் தெரியலும் பூநகு
தும்பையந் தொடையலும் வம்பவிழ் குரவமும்
கொடிப்பா சறுகு மடுக்கிய மத்தமும்
தாதகித் தாமமுங் கூவிளப் பிணையலும்
நொச்சிப் போதுஞ் செச்சைக் கண்ணியும்
கொத்தலர் வன்னிக் கத்திகை யணியலும்
நகுவெண் டலையும் பகுவாய்ப் பாந்தளும்
கொக்கி னிதழுந் தொக்குமறி புனலும்

திங்கட் கொழுந்துந் தங்குபு கிடப்ப
உரைசெறி சுருதி பரசுநான் முகத்து
விரைசெறி கமலத் தரைச வன்னம்
காணு தயரக் ககனமு டுருவிச்
சேணிடைச் சென்று சிந்தையுங் கடந்து
மேருக் குன்றம் விழுதுவீழ்த் தன்ன
வார்சடை புனைந்த மணிநெடு முடியோய்!
கொத்தழல் விழிபுடை கொழித்தெனக் கிடந்த
வித்தக வெண்பொடி மத்தகத் திறையோய்!
ஞாயிறுந் திங்களுஞ் சீறுமா ரழலும்
வீறுவீ றுதித்தெனக் கூறுநாட் டத்தோய்!
சாமகீதமுந் தந்திரத் தொகுதியும்
ஓதுசெம் பவள வுவாமதி முகத்தோய்!
சங்கவெண் டோடும் பொங்கொளி விரிக்கும்
சுடிகைப் பாந்தட் புனைமணிக் குழையும்
நிலவும் வெயிலுங் குலவிநின் றெறிப்ப
அடியர் பாடலு மண்டர்தங் குறையும்
முடிய வினவி யொடியா நேயத்
தருள்விழிக் கிசைக்கு மிருசெவி யுற்றோய்!
செந்தழல் வடிவ மாதலி னொருபுடை
கந்துள்கிடந் தனைய கறைகெழு மிடற்றோய்!
அண்டமு மகண்டமு மடைய வீசிய
தண்டாக் கொற்றத் தென்புய வரையோய்!
ஆலமுற் றிருக்கு மாயிரம் பகுவாய்
கோல வாளராக் கோட்டுகங் கணத்தோய்!
மடக்கொடி யிமய மாதுவா ணுதலும்
தடக்கணும் பொருஉந் தாமிவை யென்னப்

பரசு மானும் பற்றுகைத் தலத்தோய்!
நிலவுநூற் றென்னக் குலவுமுந் நூலும்
பொன்வார்ந் தன்ன பொறிவா ளுரகமும்
கருமதி யுடனொரு வெண்பிறை கிடந்தன
ஆமை யோடு மேனவெண் மருப்பும்
புனமயிற் சாயல் வனமா னேக்கி
தனதடப் பொறியும் வரிவளைத் தழும்பும்
பன்னிரு தடந்தோட் கொன்னிளஞ் சேயின்
சிற்றடிச் சுவடு முற்றமார் பகத்தோய்!
பூவா வேங்கைப் புள்ளியந் தோலொடு
கூவா வாரணக் கோழுரி யசைத்தோய்!
ஒருதா ளூன்றி நீர்நிலை நின்றும்
இருதா ளுவமை யின்றுகா றெய்தாக்
கமலம் பழித்துக் கனைகுரற் கழலுடன்
சிலம்புகிடந் தொலிக்குஞ் செவ்வித் தாகிச்
சேயொளித் திகிரியொடு வெள்வளை தாங்கிய
மாயோன் சாத்திய வனசத் தாயிரம்
தண்மல ரன்றிக் கண்மலர் புனைந்தும்
காணா துழலச் சேணிடை யொளித்து
நேசச் சிறுவற் குயிர்க்கொடை புரிந்து
பாசக் கூற்றுயிர்ப் பலியுண்டு கறுத்துப்
போதவிழ் கோதைப் பூங்கொடி யிமய
மாதுமை மடந்தை வருடச் சிவந்து
மண்ணவர் நெருங்கி மலர்மழை பொழிந்து
விண்ணவர் மணிமுடி விழுத்தழும் பிருந்து
நாவல னேவலி னேவலா ளாகி
ஒருமுறை யன்றி யிருமுறை நடந்து

குறையாச் சனனக் கோடை தீர
நிறைகூ ரின்ப நீழ லாகி
ஓத வோத வுலவாக் காட்சி
வேத முடியின் விளங்கிய தாளோய்!
வேரள வொழுகி விரைச்செழுங் கமலத்
தாள்கலைஇ வரிச்சிறைத் தாதமர் வண்டினம்
கூட்டுணா வொழுகிக் குண்டலைப் பாய
விரிதலைத் தொடுத்த பிரசம் பொருது
பூங்கழை யொருபாற் பாங்குற வளைந்தது
கருப்புவில் குழைத்துச் சுருப்புநாண் பிணித்து
முள்ளரை முளரி முனையம் பநங்கன்
தெள்ளிதி னெய்யுஞ் செய்தி யேய்க்கும்
வளவய லுடுத்த வலிவல மூதூர்
நண்ணிய மனத்துணை நாதநீ கேண்மோ
ஓதுவ தொன்றுள தியாதென வினவின்
அவிரொளி மயமா யசைவொன் றின்றி
இவர்தரு மிறையோய் நீயுங் கவரா
மாதுமை மடந்தையுஞ் சூதாடல் செயுநர்
இனமாக் கழக மெய்தினிர் தொடங்கி
வண்ணமீ ரிரண்டு மெண்வர வமைத்துக்
கண்ணுதல் வருஉந் தண்ணிய வுயிர்நாய்
நாற்கதி வீதியிற் பாற்படப் பரப்பி
ஆணவ நீல வவிர்மணி யுழக்கில்
தருமா தரும விருகவ றிட்டுக்
கடவலுங் கடவ வாயங் கண்ணி
எண்டிசை யரங்கத்துத் தண்டா தலமந்
தலமருங் காலை யாரஞ ரெய்தி

இறந்தும் பிறந்து மின்ன லுற்றும்
மன்ன லின்றி யின்பமுற் றேடியும்
அரணஞ் சார்ந்து மாங்கது வின்றி
மரணஞ் சார்ந்து மாளாது பழுத்தும்
பரப்புநா யின்னணம் பருவரல் கூர
அன்று பூட்டிய வாட லாயம்
இன்று காறு மீறுகண் டிலதே
காணா தாக யானு மாணா
தந்நெடு வீதியிற் பன்னெடுங் காலம்
சுழன்றன னாக வழங்குவ லந்தோ !
நுமக்கது விளையாட் டெமக்கோ புன்கண்
ஆதலி னென்க ணன்பாற்
காதலி னதுநீ கடைக்கூட் டுவதே.

(வெண்பா)

20. கூட்டுவது மன்பருடன் கூட்டியபின் சேவடியைக்
காட்டுவது நாயேனைக் காப்பதுவும் — மூட்டுகனல்
வண்ணா வலிவலத்துள் வாழுமிறை வாமூன்று
கண்ணா வுனக்கே கடன்.

(கட்டளைக் கலித்துறை)

21. கடந்தான் கணக்கிலி காலங்கள் ஞாலங்கள் கற்பமெல்லாம்
இடந்தா னிடந்துமங் கெய்துகில் லான்சந்திர விலன்று
நடந்தான் வலிவல முதூர் மனத்துணை நாதனென்னத்
திடந்தா னுனக்குள தேநெஞ்ச மேயென்கொல் சிந்திப்பதே.

( அகவல் )

22. சிந்தையுஞ் செல்லா தாயினும் வந்தென
துள்ளத் துள்ளே யள்ளூறி விளைந்த
துன்னரு ளமிழ்தே பின்னெவ னுளதோ
ஆதலின் மனத்துணை யாபவ னீயே
கடுங்கா லொற்றக் கதலிக் கானம்
நடுங்கிய தேய்ப்ப நெடுங்கொடி நுடங்கும்
செம்பொற் புரிசையும் பைம்பொன் மேடையும்
மேருவென் றிரவி சூழ்வர நோக்கும்
கோபுர நிலையுஞ் சோபான மாடமும்
அரமியத் தலமும் விரவிச் சிறந்த
வலிவல மூதூர் வானவ கேண்மோ
நான்குதலை யிட்ட வெண்பதிற் றிலக்கத்
தூன்கெழு தோற்றத் துராஅய்ப் போந்து
மானிடம் பெறுதலு மரிதே பெரிதும்
பனியின் சீதமும் வெயிலின் கேதமும்
உடைய தன்றி யுறுபுன லுடைய
அகநா டெய்த லதனினு மரிதே
இழிதொழில் வாழ்க்கை யிழிகுல மொரீஇ
ஒழுக்கம் பூண்ட வொடியா வாய்மை
விழுக்குலத் துதிப்பது மரிதே யதாஅன்று
கூனுங் குருடு மூகையு நீங்கி
உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலும்
அரிதே யனைத்து மடையினு மிடையா
துன்னடிக் குறாஉ முள்ளமோ வரிதே
ஒருவழி யனைத்து மொன்றினும் யாக்கை
வெருவரு நிலைமை விளம்புமா றுடைத்தே

காஞ்சன வுருக்கொடு களத புதத்துருக்
கேஞ்சென விசைந்துழி யிறுதலு மொன்றே
அன்னது பிழைப்பின் வெண்ணெயிற் றிரண்டு
பின்னது விளிதலு மொன்றே யதாஅன்று
நான்பிற வுரைப்பதை யெவனோ கூன்புற
யாமை போன்றஃ திழத்தலு மொன்றே
திங்கள், உருவெனத் தோன்றி யுலத்தலு மொன்றே
தருவென விருநிதி சார்ந்தவர்க் கருளி
ஒருபெயர் புனைவுழி யொழிதலு மொன்றே
குன்று வன்பிற் குரவர்ப் பணிந்து
மையாட் டயர்வுழி மாய்தலு மொன்றே
கல்வியுங் கேள்வியுங் கசடற நிரம்பிச்
செல்வுழி வாழ்நா டேய்தலு மொன்றே
காம னென்னக் கழிவனப் பெய்தி
வாம மேகலை மங்கையர்த் தழீஇ
யாமமும் பகலு மறியா தெய்தும்
ஏம வின்பத் திறுதலு மொன்றே
மக்களொடு மகிழ்ந்து மனையறங் காப்புழித்
தொக்க தீப்பிணிச் சுழல்விழிப் பருகுவாய்
வேங்கை பாய வீதலு மொன்றே
தள்ளு முசலுஞ் சகடக் காலும்
வெள்ளநீர் மொக்குளும் விரைசெலற் கறங்கும்
கொண்ட னிழலுந் தண்டாது நிலைப்பினும்
நிலையா நிலைமை நிலையின தன்றே
இவ்வகை பணைத்துணை யெவ்வகைத் தொழுகேன்
கவ்வை நீங்கிக் கான்மாத் திரை வயிற்
செவ்விதிற் பாவனை தீத மெய்தி

வாளா திருக்க வரந்தந்
தாளாக் கொள்வ தையநின் னமைவே.

(வெண்பா)

23. வேண்டீர் வலிவலஞ்சேர் விண்ணவனைப் பெண்மோகம்
பூண்டீர் குழலுமவர் பொய்யுரையும் — ரண்டும்
அறலிக் கெனவகுப்பீ ரந்தோர் கொடுபோம்
மறலிக் கெனவகுப்பீர் மற்று.

(கட்டளைக் கலித்துறை)

24. மற்றொ ருதவிசெய் வார்நெஞ்ச மேனும் வலிவலத்தை
உற்றோர் மனத்துணை நாதரல் லாலுகந் துள்ளுகண்டாய்
சுற்றோர் யமபடர் சூலமும் பாசமுஞ் சுற்றிச் சுற்றி
இற்றோ ரெனக்கழுத் திற்சுருக் கிட்டுநின் றீர்க்குமன்றே.

(அகவல்)

25. அன்றெனி னன்றொ யாமெனி னதுவாய்
ஒன்றெனி னொன்றாய்ப் பலவெனிற் பலவாய்
நின்றதுன் னிலைமை யாதலி னன்று
தெள்ளமு திமையோர் தெவிட்டவுண் டுகப்ப
ஒள்ளழல் விடமுனக் குதவிய தவறு
தீர்ப்பது வேண்டித் திரைக்கரங் கூப்பி
நிலஞ்சூழ் பரவை நிரைமல ரேந்தி
வலஞ்சூழ் வரூஉம் வண்ண மேய்ப்பப்
பொய்கைசூழ் வலிவலப் புகழ்நக ரமைந்தோய்!
முற்றுணர்ந் துன்சீர் மொழிவது முளரி
உற்றநான் முகற்கு மொல்லுவ தன்றெனிற்
சிறியேன் செப்புவ தெவனோ குறியாது

உள்ளன போல வில்லன விசைப்பினும்
நல்லன போலத் தீயன நவிற்றினும்
புகழ்ந்தன போல விகழ்ந்தன வடியேன்
உரைத்தன னாயினும் பொறுத்தி
வரைத்தனு வளைத்த மதவலி யோயே!

(வெண்பா)

ஓயாப் பிறவி யொழிய மடநெஞ்சே
சாயாத் தவமொன்று சாற்றக்கேள் — மாயாத
வாரிசத்தான் காணா வலிவலத்தான் மங்கையொரு
பாரிசத்தான் பாதமே பற்று.

(கட்டளைக் கலித்துறை)

27. பற்றுகண் டாய்நம் வலிவல நாதனைப் பற்றிக் கொண்டு
சுற்றுகண் டாய்புகழ் சொல்லுகண் டாயம தூதர்வந்தால்
எற்றுகண் டாயந்த மில்லாத வானந்த மெய்தியென்றும்
முற்றுகண் டாய்முற்று மாயாப் பிறவி முயலுநெஞ்சே.

(அகவல்)

28. முயன்மறுத் துடைத்த முற்று மதியுடன்
அயலய லுடுக்கண மரும்பிய வென்னப்
பசுந்துணர்த் தும்பை வெண்பூ மிலைச்சிச்
செவ்வா னேய்க்குஞ் செழுஞ்சடை முடியோய்!
பைந்தொடி யிமயப் பாவையொடு கெழீஇ
இந்திர திருவிலி னெழினலங் கனிந்தோய்!

முலைத்தடஞ் சேதகம் பொறிப்பக் குலைத்துடன்
வளைமுடி நடுமார் களமரொடு துவன்றிய
கருங்குழற் பசும்பூண் வெள்வா யுழத்தியர்
மருங்குலி னிழிந்த மகாஅ ரொருங்குடன்
தள்ளாக் கோட்டிற் றளர்நடை பயிலா
வெள்ளைக் குருகின் பிள்ளையொடு வதியும்
அள்ளற் பழனத் தணிவய லுடுத்த
மல்லற் செல்வ வலிவல மூதூர்
நயந்துறை மனைத்துணை நாத கேண்மதி
வானவர் முடிமிசை மலிதரு நினது
தேனமர் தாமரைச் சேவடி பழிச்சி
மூண்டெழ மன்பால் வேண்டுநல் வரம்யான்
பல்பெருங் கலைகள் பாற்படப் பழகிக்
கல்வியி னெடுங்கரை காண்பது வேண்டும்
இன்னுங் கேண்மோ பன்னுவ திறைவ!
இல்லென விரக்கு மிளிவர வின்றி
மல்லற் செல்வ வாழ்வது வேண்டும்
மற்றுமொன் றயர்த்தன னுற்றுநீ வினவின்
உலைவது சிறிது மின்றியென் னுளமோர்
நிலைமையி னென்று நிற்பது வேண்டும்
பாச வல்லி வேரற வகழ்ந்து
மாசற மேற்கதி வழங்குதல் வேண்டும்
அன்னது வழங்கா யாயினு நின்னடித்
தாமரை தொழூஉந் தாவா நேயம்
இன்னு மின்னு மதுவே யெய்தத்
தருவது வேண்டு நின்னுடைப்
பொருவரி தாய புகழினும் பலவே.

### ( வெண்பா )

29. பலகற்று மீசன் பதம்பணியார்க் கந்த
அலகற்ற கல்விகொண்டே தாமால் — இலகுற்ற
மாதிருக்கும் பாகன் வலிவலத்தான் ருள்பரவு
மாதிருக்கு மாற்று மருந்து.

### ( கட்டளைக் கலித்துறை )

30. மாற்றும் பிறவிப் பிணிக்கின் மருந்து வருந்தவந்து
தோற்றுங் கடுங்கண் மறலிக்குக் கூற்றின்று
சூழ்ந்துவிண்ணோர்
சாற்றும் பிரானம் வலிவலத் தான்செஞ்
சரணமென்றும்
போற்றுஞ் சுருதிப் பொறிவண் டினுக்கந்தண்
பூவிரியே.